வேண்டுமென்று இங்கே கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை கொண்டு சென்று, அதை நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 233, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

233—

புதிய வணிக வளாகம்

*38480—**திரு. எம்.கே. செல்வராஜு:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகராட்சியில் புதிய பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் புதிய வணிக வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாநகராட்சி, புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் புதிய வணிக வளாகம் அமைக்கும் உத்தேசம் ஏதும் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. செல்வராஜு அவர்கள்.*

திரு. எம்.கே. செல்வராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊண் உறக்கம் மறந்து, உருகுகிற மெழுகாக, உழைக்கும் தீபம், உலகத் தமிழர்களின் உரிமைக் குரலாக ஒலிக்கும் கீதம், 'எனக்கென்று ஏதுமில்லை, எனக்கெல்லாம் நீங்கள்தான்' என்று (மேசையைத் தட்டும் ஒலி) தமிழினமே தனக்கு உறவு, தமிழகமே தனக்கு வேலி என்ற தவம் கொண்ட வாழ்வாலே, தன்னை மெய்வருத்தி, தமிழகத்தை வழிநடத்தும் தன்னலமில்லா தியாகம், ஏணிகளின் தயவின்றி வான்தொட்ட வல்லமை, (மேசையைத் தட்டும் ஒலி) பாமரர் முதல் பாட்டாளி வரை இலட்சத்துக்கும் மேற்பட்டோருக்குப் பச்சை மையில் கையெழுத்திடும் பாக்கியத்தைத் தந்திட்ட, மக்கள் சக்தி படைத்த மகா சக்தி, (மேசையைத் தட்டும் ஒலி) தீய சக்தியைத் தமிழகத்தின் அரசியலிலிருந்து துடைத்தெறிய வேண்டுமெனும் பொன்மனச் செம்மலின் வாழ்நாள் கனவுக்கு வடிவம் தந்து, அசைக்க முடியாத இமாலயப் பெரும் இயக்கமென அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை, முக்கடல் சூழ்ந்த பாரதத்தின் மூன்றாம் பெரும் இயக்கமாக முடிசூட்டி, ஓராயிரம் எதிரிகள் ஓரணியில் திரண்டாலும், கூராயுதம் ஏந்தி நரிக் கூட்டமெனப் புரண்டாலும், இரு விரலை ஈட்டியாக்கி, ஈகையால் வாகைகளை இரட்டிப்பாக்கும் இருபத்தோராம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற இந்தியப் பெருந்தலைவர், மாண்புமிகு எங்கள் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10-45

எதிர்வரும் காலத்தில் சேலம் மாநகராட்சிப் பேருந்து நிலைய விரிவாக்கப் பணிகள் செய்யப்படும்போது, அந்தப் பகுதியில் நவீன வணிக வளாகம் அமைத்துத் தர வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகராட்சிப் பகுதியில் பாரத*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். மத்திய பேருந்து நிலையம் மற்றும் பழைய பேருந்து நிலையம் என இரு பேருந்து நிலையங்கள் உள்ளன. பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். மத்திய பேருந்து நிலையத்தில் 85 கடைகள் இருக்கின்றன. அவற்றின்மூலம் ஆண்டுக்கு 64,05,852 ரூபாய் வருவாயும், ஆண்டு உரிமை ஆணை இனங்களின்மூலம் 1 கோடியே 72 இலட்சத்து 90 ஆயிரத்து 50 ரூபாய் வருவாயும் ஈட்டப்பட்டு வருகின்றது. இந்தப் பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில், அப்பகுதி மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது. அவ்விடத்தில் மேலும், 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி தற்போது கட்டப்பட்டு வருகின்றது. இதைத் தவிர, இந்தப் பேருந்து நிலையத்தின் அருகில், சேலம் மாநகராட்சிக்குச் சொந்தமாக காலியிடம் எதுவும் இல்லை என்பதால், இப்பகுதியில் வணிக வளாகம் கட்டும் உத்தேசம் ஏதும் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 234, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

234—

கால்நடை மருத்துவமனைக் கட்டடத்தைப் புதுப்பித்தல்

***47712—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராதாபுரம் தொகுதி, திசையன்விளையிலுள்ள கால்நடை மருத்துவமனைக் கட்டடத்தைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,